உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

“பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்; அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சினா னுளும் விண்ணோர் மிசைகுவர்; வேத போதன்
‘நச்சினார்க் கினியன்’ எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்”

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-ஹு ஐப்பசி-மீ 1926-ஹு அக்டோபர்மீ { பகுதி 10.

திருவருண் முறையீடு.

விண்ணுடையாய்! வெள்ளி வெற்புடையாய்! மதி மேவுசடைக்
கண்ணுடையாய்! வெற்றிக் கண்ணுடையாய்! அருட் கண்ணுடையாய்!
பண்ணுடையாய்! இசைப் பட்டுடையாய்! இட பாலிவருட்
பெண்ணுடையாய்! வந்திப் பிட்டுடையாய்! என் பெருஞ்செல்வமே! 1

விடையுடையாய்! மறை மேலுடையாய்! நதி மேவியசெஞ்
சடையுடையாய்! கொன்றைத் தாருடையாய்! கரந் தாங்குமழுப்
படையுடையாய்! அருட் பண்புடையாய்! பண் பரவையின்பால்
நடையுடையாய்! அருள் நாடுடையாய்! பதம் நல்கு வையே! 2

கீளுடையாய்! பிறைக்கீற்றுடை யாய்! எங் கிளைத்தலைமேற்
றாளுடையாய்! செஞ் சடையுடையாய்! என் றனையுடையாய்!
வாளுடையாய்! மலை மானுடையாய்! கலை மானுடையாய்!
ஆளுடையாய்! மன்று ளாட்டுடையாய்! என்னை யாண்டருளே! 3

நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும் பஞ்சு
தான்படுமோ? சொல்லத் தான்படுமோ? எண்ணத் தான்படுமோ?
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கிகின்றேன்!
என்படு கின்றனை யென்றிரங் காயெனில் என் செய்வனே 4

— இராமலிங்க சுவாமிகள்

மருவி வழங்கும் சில சொற்கள்.

(255 ஆம் பக்கத் தொடர்ச்சி).

"அநாதி" என்பதன் பொருளறியாதார், பரஸ்பரம் திட்டிக் கொள்ளும்போது, "அநாதிப்பயல்" என்று கூறக் கேட்டுள்ளோம் இவர்கள் அறியாமையால் வழங்கும் இச்சொல், வசைமொழியாகாமல், சாக்ஷாத் ஈசுவரனையே குறிக்கும் ஓர் உயர்மொழியாகும். எங்ஙன மெனில், "அநாதி" என்பது 'ந+ஆதி' ஆகலின், அது 'ஆதி யென்பதில்லான், அதாவது கடவுள்' என்று பொருள்படும். இவர்கள் கூறவிரும்பியது 'அநாதை' என்றமொழி. அது 'ந+நாதா' ஆதலின், 'நாதன் (தலைவன்) அற்றவன் அதாவது ஆதரிப்பாரற்ற ஏழை' என்று பொருள்படும். 'அ'எனத்தொடங்கினும் சில வடமொழிச் சொற்களின் பகுதி அம்மொழி இலக்கணப்படி 'ந' ஆதலை, 'அநங்கன்', 'அநேகம்', 'அநசூயை', 'அநந்தம்' முதலிய சொற்களினின்று அறிக. இவை முறையே, 'ந+அங்கன்' அங்கமில்லாதவன்: மன்மதன்; 'ந+ஏகம்'; ஒன்றல்லாதது: பல; 'ந+சூயை';-அசூயை இல்லாதவள்; 'ந+அந்தம்';-முடிவற்றது: எண்ணிறந்தது. எனப் பொருள்படும். நிற்க.

"பல்லாங்குழி" என்ற பொருளைப் பார்த்தும் உபயோகித்தும் வருகிறோம். அதற்கு அப்பெயர் ஏன் அமைந்தது என்பதைச் சிறிது பிரயாசைப்பட்டு உணர்ந்தால் அப்பொருளின் திருத்தமான பெயர் இன்னதெனவும், எளிதில் அறிந்துகொள்ளல் இயலும். அதனை கவனித்து அதில் உள்ள குழிகளை எண்ணிப்பாருங்கள். நடுக்குழிகளாகிய காசியைச் சேர்த்து மொத்தம் பதினான்கு குழிகள் இருக்கக் காண்பீர்கள். ஆதலின் பதினான்கு குழியுள்ள அப்பொருள் 'பதினான்குகுழி' எனப்பட்டது. பதினான்கு என்பது பதினான்கு என்று ஆகும். ஆதலின், "பதினான்கு குழி" என்பது "பன்னான்கு குழி" என்றாயிற்று. அதன் மரூஉ 'பன்னாங்குழி' என்பது. இதுவே தவறாக "பல்லாங்குழி" எனப்படுகிறது. அது பள்ளமும் குழியும் நிறம்பியதாய் "பள்ளங்குழி" எனப்பட்டதென்றும், அதுவே 'பள்ளாங்குழி', 'பல்லாங்குழி' என மருவிற்றென்றும் கூறினர் ஒருவர். இங்ஙனம் கருதுவோர் எத்தனை பெயருளரோ!

(இன்னும்வரும்.) பத்திராதிபர்.

பராந்தகன்.

பத்தாவது காட்சி.

இடம்:—கள்வர் மனை.
காலம்:—இரவு 9-மணி.
பாத்திரங்கள்:—மாயாண்டி யொழிந்த மற்றையோர்.

[இருளன் இடைவிடாது கதவைத்தட்ட பேச்சி திறக்கிறாள்.]

பே:—இருளா! வா. எங்கே ரெண்டு நாளா ஒன்னெக்காணும்?

இரு:—சொல்றேன்—மத்தவக எங்கே?

பே:—எல்லாரும் ஒறங்கராக குண்டித்துணிபோன இடம்கூடத் தெரியாதபடி. அடிச்சுப்போட்ட நாய்கணக்காக் கெடக்கராங்க.

இரு:—அிளெச்சுக்கிட்டு வா அவங்களே.

பே:—மலம்பாம்புகளாவது திவச்சுப் பொசுக்கினு, புஸ்ஸ—புஸ்ஸ—இண்டு மூச்சுவிட்டுக்கிட்டு நகரும். இவங்க அதுகூட மாட்டாங்களே.

இரு:—அம்பிட்டுத் தூக்கத்துக்கு என்ன காரணம்?

பே:—காலேலே கோளி கூப்பிடும் சமயமிருக்கும். அம்ப கனுவன் ஆரையோ கண்ணெக்கட்டி அள்ச்சுக்கிட்டு வந்தான். வந்தவக காரியமா, இன்னும் ரெண்டுநாளி களிச்சு எங்கேநாச்சும் பொறப்படுவாங்க போலிருக்கு.

இரு:—வந்தது ஆரிண்டு ஒனக்குத் தெரியுமா?

பே:—தெரியாது. புது ஆளு.

இரு:—ஒரு முக்கிய சமுசாரம் ஒனக்கும் அந்தப்பயங்களுக்கும் இப்பொ சொல்லணும். போய் எளுப்பிவா அவங்களே. எந்திருக்காட்டி, தலேலே தண்ணிஞெக் கொட்டியாவது எளுப்பிவா. போ பொக்கிண்டு

பே:—இதோ போறேன் [போகிறாள்]

இரு:—(தனக்குள்) பேச்சி பிறப்பில் கள்ளியல்லள் என்றும், பஞ்சரத்தில் அடைபட்ட பஞ்சவர்ணக்கிளி என்றும் எனக்கு எண்ணப்படுகிறது. இதனைப்பற்றிய முழுச் செய்தியையும் முற்றும் அறியவேண்டியதே.—பின்பு பார்த்துக்கொள்வேன்.—நான் முடிக்க நினைத்த முதற்காரியம் ஈசுவர கிருபையால் முடிவுபெற்றுவிட்டது. பலர் உயிரைக் கொள்ளையடித்துவந்த துராத்மா ஒருவனைக் கொலைத்துச் சிறிது புண்ணியத்தைக் கொள்ளையடித்துவிட்டேன்.—இதுவரை நான் மனமார அகாரணமாய் எவர்க்குந் தீங்கிழைத்ததில்லை. ஆயினும், மதிமயங்கி, அன்று அவ்வபலையை - சுகுணமும் சுந்தரமும் மிக்க மங்கையர்க்கரசியை—அவள் விருப்பிற்கு விரோதமாக நான் முத்தமிட்டது தவறே என உணருகிறேன். ஆனல், என் நிலையில், அச்சமயம் பிறனெவனேனும் இருந்திருப்பின், குலக்கேடான காரியமும் புரியாதிருந்திருக்க முடியாது. புரியாதிருக்

திருப்பானுபின், அவன் பேடியே ஆதல் வேண்டும். வரம்புமீறி ஏதும் செய்தறியாத நான், அன்று செய்ததை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், ஒருவேளை எனக்கும்அவளுக்கும் முடிச்சுப் போட்டிருக்குமோ என்றெண்ணவும் எனக்கு இடந்தருகிறது. இல்லையேல், சர்வோத்தமனான எனக்கு, ஏன் திடீரென அவ்வாறு புத்தி மாறியது?—ஏன்? 'முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ?'. திருவருளே 'கூட்டுவித்தால் யார் ஒருவர் கூடாதாரே?'

[பேச்சி வருகிறாள். தடுமாறி விழுந்து விழுந்தெழுந்து கொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும், கள்வர்கள்,ஒருவர்பின் ஒருவராய் வந்து உட்காருகின்றனர்]

இரு:—(அவர்களைக் குடுமியைப் பிடித்துக் குலுக்கி முகத்தில் தண்ணீரை வாரி இறைத்து) எல்லாரும் முளிச்சிக்கிட்டீங்களா? அதெ நல்லாத் தெரிஞ்சு சொல்லுங்க மொதமொதல்.

அமா:—(எரிச்சலுடன்) ஒனக்கு எப்போதும் வேடிக்கையும் வெளெயாட்டுந்தான். மருவாதி கெட்ட மடயனுகவே இருக்கே—சரி. சங்கதி என்ன?

வீர:—என்ன பேச்சு லொடாலொடண்டு? எனக்கு நல்லாத் தூக்கம் வருது. சொல்லித்தொலை உன் சமுசாரத்தை.

கலு:—அது கெடக்கட்டும். பெரியவக காரியத்தை முடிச்சிட்டியா? அதெ மொதல்லெ சொல்லு.

எல்லோரும்:—ஆமாமா. அதெ மொதல்லெ சொல்லு. பெரியவக காரியம் முடிஞ்சிச்சா?

இரு:—(புன்னகையுடன்) ஒங்களுக்கு என்ன தோணுது?

கலு:—இருளன் நெனக்கரதொண்ணு செய்யரதொண்ணா? அது என்னிக்கிநாச்சும் உண்டா? நீ நெனச்சா நெனச்சபடி அவக காரியத்தெ முடிச்சேதான் இருப்பே

எல்லாரும்:—அதுக்குச் சந்தேகமா? இருந்தாலும், ஒன்வாயாலே கேட்டா எங்களுக்கு இன்னும் சந்தோசமா இருக்கும் பாரு.

இரு:—என் வாயாலேயா சொல்லணும்? சொல்ரேனே: அவுக காரியம் - நேத்திராத்திரியே - அம்புட்டும் - பாக்கிசாக்கியில்லாதே - பூரா - முடிஞ்சிடுச்சு. இனிமே - அம்ப செய்யக்கூடியது ஒண்ணுமே இல்லெ.

எல்லோரும்:—(மீசையை முறுக்கி முண்டாத்தட்டி) பேஷ் பேஷ்! பலே பேஷ்! பலே பலே!

அமா:—பய நீ போயிருக்கிறபோது காரியம் முடியாமலா போகும்?

வீர:—பெரியவுக எங்கே?

கலு:—எங்கே? காமராசபாண்டியர் கிட்டப் போயிருப்பாங்க. இல்லாட்டி, தங்கமுத்துத்தேவரிடம் போயிருப்பாங்க. ஏன் இருளா அப்படித்தானே?

இரு:—(முகம் சுளித்து) அப்பவே சொன்னேனே: அவக காரியம், பூரா, நேத்தே, முடிஞ்சிடுச்சிண்டு. என்ன முளிக்கிறீங்களே. இன்னும் தெரியல்லே! சாமி ஒங்களை எப்படித்தான் படச்சிச்சோ? நல்லா விட்டுச் சொல்லிப்போட்டேனே-ஒளிமறைவென்ன? அவுகளை ஆரோ குத்திக் கொலெசெஞ்சு போட்டு, விட்டாங்க. அவுக காரியம் முடிஞ்சே போச்சு. இப்பாநாச்சுந் தெரிஞ்சிச்சா?

எல்லோரும்:—(வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு) என்ன! என்ன! ஆத்தாடி ஆத்தாடி ஆத்தாடி! ஆத்தாடி! விளுந்திச்சே இடி! விளுந்திச்சே இடி! செத்தோமே செத்தோமே. ஐயோ! ஐயோ! ஐயோ!

ஒருத்தி:— ஆச்சா மரமே! அளிவில்லே யின்னிருந்தேன்.
ஆச்சா மரத்துக்கும் அளிவுவர நாளாச்சோ?
இரும்பான கோட்டைக்கி இளக்கமில்லெ இன்னிருந்தேன்
இரும்பான கோட்டைக்கும் இளப்பம்வர நாளாச்சோ?
கல்லான கோட்டை கரையாது இன்னிருந்தேன்
கல்லான கோட்டையும் கரஞ்சுவிள நாளாச்சோ?

இரு:—(வெகு கோபத்துடன்) ஒங்களுக்குப் புத்தி கித்தி இருக்கா? வாயெ அடெச்சுக்கிட்டுக் கெடந்தீங்களோ பொளெச்சேங்க. இல்லாட்டி பெரியவங்க கதிதான் ஒங்ககதி: சறுக்காரு ஆளுக வேசமாறி, சந்து சந்தா, பொந்து பொந்தா, பெரியவங்களைச் சேர்ந்தவகளையும் அவுகளுக்கு வேண்டியவங்களையும் கண்டுபிடிக்கத் திரிஞ்சுக்கிட்டிருக்காங்க. சமுசியத்துக்குக் கொஞ்சமாவது எடம், அம்பகிட்ட இருந்திச்சோ, செத்தோம். பாத்துக்குங்க.

வீர:—பெரியவங்களையே கொலே செஞ்சிட்டாங்க இண்டா, அம்பகதியெ என்ன இண்டு சொல்றது?

கறு:—கொலே செஞ்சது ஆரு?

அமா:—எங்கே வச்சுக் குத்திப்போட்டகளாம்?

கறு:—எப்பொக் குத்திக் கொண்டேட்டாகளாம்?

இரு:—அரமனைத்தோட்டக் கோவிலுக்குள்ளே, சாமிக்கெதிரேயே ராசாமகளுடைய காலடியிலேயே, அவுக,ரெத்தம்கக்கிச் செத்துக் கிடந்தாரு. நான் இந்தக்கண்ணாலே பார்த்தேன். குத்தினவக ஆரு இன்னிமட்டும் தெரியல்லே. ராசாமகதான் செஞ்சாளோ, அவளுக்காக அரமனைப்புலிக ஆராவது நான் செஞ்சிச்சோ? பாவம்! எக்கச்சக்கமா ஆப்பிட்டுக்கிட்டாரு. விதியும் முடிஞ்சிச்சு. இனி என்ன செய்யாது? [எல்லாரும் அழத் தொடங்குகிறார்கள்.]
மறுபடியும் உங்களுக்குப் புத்தியில்லியே. அளுது பிரயோசனம்? நாளை காலேயிலேயோ மதியத்திலேயோ அவக பொணம் எல்லாருங் காணத் தூக்கு மேடை ஏறப்போறது.

வீர:—அவுகளெ இன்னாரென அறிஞ்சுக்கிட்டாங்களோ?

இரு:—நீ ஆம்பளேதானுடா? தூத்தேரி! என்ன இம்புட்டுப்பயம் பயப்பட்ரியே.

அமா:—இருளா! என்ன இப்படிச் சொல்றே? அவுகளெ அறிஞ்சுக்கிட்டா அவுக கூட்டாளியான அம்பளேயும் அறிஞ்சிக்கிட்ட மாதிரியில்லே?

கலு:—அவுக உசிருதான் போச்சே. அவுக போணத்தை ஏன் தூக்கிலே போடுராங்க?

இரு:—ஏனு? 'இந்த ரோக்கியனே எல்லாரும் பாருங்க; காறித் துப்புங்க இவன் மொகத்திலே' இண்டு அருமானப் படுத்தத் தான். அம்புட்டோடே, அவுகளேச் சேர்ந்தவங்க எப்படியும் வேசமாறியாவது வருவாங்க, அவகளேக் கண்டுபிடிச்சு இதே மாதிரிக் கொலேசெஞ்சு தூக்குப்போடலா மிண்டுந்தான்.

எல்லோரும்:—ஆத்தாடி!! அப்போ, நாளேக்கு, அங்கே, அம்ப, போகவேபடாது. நல்லவேளேயாப்போச்சு.

இரு:—என்ன இந்த நடுக்கம் நடுங்கறிங்களே?

அமா:—ஏன் இருளா, ஒனக்குமட்டும் நடுக்கம் கிடுக்கம் வல்லியா? சாமி சாக்கியாச் சொல்லு. நீமட்டும் அளுகவே காணுமே.

இரு:—நடுக்கமா! எதுக்கு? எனக்கு அளுகையே வல்லே; சிரிப்புத் தான் வருது.

எல்லோரும்:—அட பாவி! ஒனக்குமட்டும் எப்படித்தான் சிரிப்பு வருதோ?

இரு:—கோச்சுக்காதிருங்க சொல்ரேன். நான் கேக்கறதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க: கள்ளம் பொஞ்சாதி கைம்பொஞ்சாதி தானே? அம்ப செய்யர அக்ருவங்களுக்கு என்னிக்காவது அம்பளே உசிரோடே மலேயிலிருந்து உருட்டவே போராங்க. இல்லாட்டி, கண்முளி பிதுங்க சுருக்கிட்டுச் சாகடிப்பாங்க. இது அம்பளுக்குத் தெரிஞ்சது தானே? அளுது என்ன செய்யரது? நாம அறிஞ்சறிஞ்சு செஞ்சதே அளுது அளுது தானே தொலேக்கணும்? பெரியவுகளுக்காக இம்புட்டு வருத்தப்பட்ரோமே; இதுவரை நாம எத்தினே எத்தனே பேரைக் கூசாமே கொலே செஞ்சிருக்கோம்? அநியாயமாச் செத்தவக அளும்போதாவது, அவுகளுக்கு வேண்டியவக அளும்போதாவது, ஒரு பொட்டுத் தண்ணி அம்ப கண்ணுலே விட்டிருப்போமா? அம்புளுக்கு அப்போ எம்புட்டு சந்தோசம்இருந்திச்சு? அப்போ அம்பளுக்கு சந்தோசம்; இப்போ எல்லாருக்கும் சந்தோசம். அளுகிறது சரி இண்டா, எல்லாருக்காகவும் அளணும். சிரிக்கிறது சரி இண்டா எல்லாருக்காகவும் தான் சிரிக்கணும். என்ன? நான் சொல்றது நாயமா இல்லியா?

அமா:—சரி சரி. உன்னெத்தான் புத்தி கேக்கணும், நீ அம்ப தொளிலே தெரியாதபய. சாமியாராப் போயிருந்தா எம்புட்டோ.

கலு:—சரி. பெரியவுக சங்கதி முடிஞ்சிச்சு. அதைப்பத்திப் பேசி என்ன! இனிமே நடக்கவேண்டிய வெசயங்களெப் பத்தி ரோசிப்போம்.

கறு:—அம்பளுக்கு என்ன தெரியப்போகுது? இருளந்தான் சொல்லணும். ஆனா அவன் சரியமாட்டும் சொல்லணும்.

இரு:—நான் சொல்றதுதான் ஒங்களுக்கு வெளெயாட்டா இருக்கே நீங்க என்ன சொல்றீங்களே அது எனக்குஞ் சம்மதந்தான்.

அமா:—இல்லே, சும்மா சொல்லு.

இரு:—எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன். சம்மதமா இருந்தாச் செய்யுங்க. இல்லாட்டி விட்டுத் தொலெயுங்க.

கலு:—சொல்லு கேப்போம்.

இரு:—இப்பொ ரெண்டுலெ ஒண்ணுதான் நாம மேக்கொண்டு செய்யுக்கூடியது: ஒண்ணு, நம்ம எங்கே இருக்கோமோ, எப்படி இருக்கோமோ, அங்கேயே, அப்படியே இருந்துகிட்டு, பணங்காசு குடுக்கற படியாளிகளெ சந்தோசப்படுத்திக்கிட்டு, நல்லவகளேயும், அப்பாவிகளேயும், கையாலாகாத பொம்பளேகளேயும் கெடுத்து, கொள்ளேயடிச்சு, கொலெசெஞ்சு காலத்தைக் களிச்சிகிட்டிருக்‌ணும். ஆப்பிட்டுக்கிட்டா, தூக்கிலேயோ, உசுரோடே சொக்கப் பானே கொளுத்தப்பட்டோ, தலே வெட்டுப்பட்டோ சாகணும். அம்புளுக்கு முடிவு ஆசுபத்திரியிலோ, தூக்கிலேயோ எங்கே நாச்சும்தான். இது தெரிஞ்சே இருக்கு. இதுக்கெல்லாம் தயாரா யிருப்போமா? இல்லாட்டி—

கறு:—இல்லாட்டி என்ன? அதெயும் சொல்லிப்பிடு.

இரு:—அதுதானே சொல்லப்போறேன். அம்ப கொலெசெஞ்சு கொள்ளேயடிச்சுச் சம்பாதிச்ச பொருளே எடுத்துக்கிட்டு, மெள்ள இந்தஊரைவிட்டு நளுவி, அம்ப பேரையும் தொளிலெயும் மாத்திக் கிட்டு, நல்லவங்களாக் காலங்களிச்சு, சாமிக்கு ஒப்ப நடக்கணும். அம்ப சொத்து, அம்பளுக்குமட்டுமில்லே, பத்து தலமுறைக்கும் போதும். வேணுமிங்கர நிலபுலம் வாங்கிக்கிட்டோ, வியா பாரத்திலே கொளஞ்சோ, அம்பகாலத்தெக் களிக்கலாம். ஒலகத் துலே எம்பிட்டு ரோக்கியமான தொளில்களில்லே? எல்லாரும் அம்பளெப்போலதானா வயறு வளக்கராங்க? இன்னொண்ணு சொல்ரேன்: அம்ப செஞ்சிருக்கிற அக்ருவங்க கொஞ்சநாச்சும் தொலெய, அம்ப கொள்ளேயடிச்ச சொத்துக்களேக்கொண்டு, ரொம்ப ரொம்பத் தான தர்மம் செய்யணும். இல்லாட்டி, செத்த பொறகு சாமிக்கு சவாப்பு சொல்ல அம்பளாலே முடியாது. இனிமேநாச்சும், அரைநாளிச் சொகத்துக்காக அப்பாவிப் பொம்பளேகளே அக்ருவஞ் செய்யாமெ, அம்ப சாதியிலே நல்ல பொண்ணெடுத்துக் கட்டிக்கிட்டு, குஞ்சுகொளந்தகளெப் பெத்

தெடுத்துக்கிட்டு, கண்மூடும்வரை சேமமாயும் சந்தோசமாயும், பயமில்லாமலும், நல்லாக் காலங்களிக்கலாம்—ஏன்? நான்சொல்றது எப்படியிருக்கு?

கறு:—பலே! பலே! ஒம்புத்தியெக் கேட்டா நல்லாப் பொளச்சுப் போகலாம். அமாவாசை சொன்னபடி நீ சாமியாரா இருக்க வேண்டிய பய. அப்படியே இருந்திருந்தா எம்புட்டோ நல்லா இருந்திருக்குண்டா.

இரு:—கோச்சுக்காதே. ஒங்க ரோசனெதான் என்ன?

கறு:—கேக்கவா வேணும்?

இரு:—சோசியம் கிசியம் எனக்குத் தெரியாது. நல்லா என்னெப் போல விட்டுச்சொல்லுங்க. அம்புட்டுப் பேருக்கும் எது சம்மதமோ அது எனக்குஞ் சம்மதந்தான் இண்டு அப்பலேசொல்லிட்டேனே.

கலு:—என்னத்துக்கு வெட்டிப் பேச்சு? இப்பொ எப்படி இருந்து வாராமோ, எங்கே யிருக்கோமோ, என்ன செஞ்சுக்கிட்டு வாராமோ, அப்படியே, அங்கேயே, அதெயே, அம்ப செஞ்சிக்கிட்டு வாரதுதான், அம்ப தொளிலுக்கும் சாதிக்கும் சரியானது.—சாகாதவங்க ஆரு? எப்படிச் செத்தா என்ன? இருக்கிறவரை நினெச்ச பொம்பளேகளோடே இருந்து, சுகமனுபவச்சுக்கிட்டு, பொன்னுக் குவிச்சு, அதுலே பொறளறதை விட்டிட்டு, ஏதேதோ பேசுறுன். (மற்றவர்களை நோக்கி) ஒங்க ரோசனேயென்ன?

எல்லோரும்:—நீ சொல்றதே சரி! அதுதான் ரொம்பசரி.

கலு:—நல்லது—இருந்தாலும் அம்ப இன்னும் கொஞ்ச நாளேக்கு வெளிக் கிளம்பப்படாது. கிளம்பினேமோ ஆப்பிட்டுக்கிட்டோம்.

வீர:—ஆமா! ஆமா! அடைஞ்சு தான் கிடப்போமே. என்ன அவசரம் அடிச்சுக்கிட்டுப் போறது? அப்புறம் சேத்துச் சம்பாதிச்சுக்கிட்டாப் போகுது.

கலு:—எல்லாம் ஆறி அமந்ததும், அம்ப வேசமாறி வெளிப்புறப்பட்டு, பெரியவுக உசிரைவாங்கினபயலேக் கண்டு பிடிச்சு, வவுத்தெரிச்சத் தீர, அவனெ நாறுந்தோலுமா உறிச்செறிஞ்சு போட்டேனும்—இதுதான் அம்ப மொதல் வேலெ.

எல்லோரும்:—ஆமா! ஆமா!!

கறு:—சரி. பெரியவுகளோ போய்விட்டாங்க. அம்பளுக்குள்ளே அவுகளுக்குப் பதிலா ஆரு இனிமே பெரியவங்க?

இரு:—ஆரு? கலுவத்தேவர்தான் இண்டு எனக்குத் தோணுது.

எல்லோரும்:—எங்களுக்கும் அப்படித்தான் தோணுது. ரொம்ப சரி. ரொம்ப சரி.

கலு:—சரி. இன்னும் கொஞ்சநாளேக்கு அப்படி யப்படி ஒத்தரோடொத்தர் சேராதிருப்போம். நான் சொல்ரேன். சொல்ரபோது வந்து சேருங்க. [யாவரும் பிரிந்து செல்கின்றனர்]

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

மாண்டவன் மீண்ட மர்மம்

எட்டாவது அத்தியாயம்.

ஜோஸ்யம்.

Prediction.

கைலாஸம் ராமஸ்வாமி என்ற இருவரும், ஆறுவது அத்தியாயத்திற் சொல்லியபடி தல்லாகுளத்தில் சிதம்பரத்தோடு சம்பாஷித்த பிறகு, தங்கள் ஜாகைக்குத் திரும்பினார்களல்லவா? திரும்புங்காலையில் அவர்களுக்குள் நிகழ்ந்தவிஷயம் இது: வீடு வரும்வரை அவர்கள் பேசாமல் வழிநடந்தார்கள். கைலாசமோ, தான் ராமஸ்வாமியுடன் செல்வதை முற்றிலும் மறந்தவனாய் ஏதோ சிந்தித்துக் கொண்டே சென்றான். ராமஸ்வாமி அவன்பின்னே நிழல்போல் சென்றான். இருவரும் கைலாசத்தின் வீட்டு அறைக்குள் நுழைந்தார்கள். கைலாசம் திடீரென "ச்ஸ்! இதில் நிச்சயம் சந்தேகமாயிருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக்கொள்ள, அது ராமஸ்வாமி காதில் விழுந்தது.

ராம:—"என்ன கைலாசம்! என்ன நீயாகவே சொல்லிக் கொள்ளுகிறாய்?"

கைலா:—(திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து) "ஒன்றுமில்லை. இந்தச் சிதம்பரத்தின்மேல் எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. அவர் நமக்கு வேண்டிய கெடுதி செய்வார்போல் தோன்றுகிறது."

ராம:— "கெடுதியா? அப்படிப்பட்டவரல்லரே! நமக்கு வேண்டிய உதவிதான் செய்வார்!"

கைலா:—"என்னவோ எனக்கு தோன்றுகிறது: அவர் கெடுதியே செய்வாரென்று."

ராம:—"உனக்கு என்ன பைத்தியமா? அப்படியானால் அவர் ஏன் வலுவில், இந்தச் சமாசாரத்தை வெளியிட வேண்டும்?"

கைலா:—"காரணமா?—பாலாம்பாள் நிச்சயம் தெரிவிக்கப் போகிறாள். தாமே முந்திக்கொண்டால் நல்லவராய்விடலாமென்றுதான்".

ராம:—"என்னவோ அவர்மேல் எனக்குச் சந்தேகம் தோன்ற வில்லையே. என் தகப்பனார்போல் என்னை———"

கைலா:—"வாஸ்தவம்தான்! ஆனால் பச்சாத்தாபமென்று ஒன்று உண்டல்லவா?"

ராம:—"பச்சாத்தாபம்! உனக்குப் பைத்தியம் தான் போலிருக்கிறது."

கைலா:—"பைத்தியமில்லை—ஆனால் எனக்கு எல்லாம் சந்தேகம்தான். சிதம்பரத்தின் நடத்தையைப்பற்றிப் பின்புபேசிக் கொள்வோம். ஆனால் ஒன்றுமாத்திரம் ஞாபகமிருக்கட்டும் அவர் நாமெடுத்த காரியத்துக்குக் குறுக்குக் கட்டைபோடத்தான் செய்கிறார்".

ராம:—"என்ன, சுத்த அசடாயிருக்கிறாய்? அவர் அப்படிச் செய்ய என்ன காரணமிருக்கிறது?—"

கைலா:—"கொஞ்சம் பொறு.—காரணமா? காரணமுண்டு—ஆனாலிப்போது என்னால் சொல்லமுடியாது. ஆனால் ஒன்று சொல்லுகிறேன். இதுமுதல் 24-மணி நேரத்தில் அவர் இரண்டு 'வேலைமானம்' செய்யப்போகிறார். என் ஜோஸ்யத்தைப்பார்."

ராம:—"ஜோஸ்யமா? அது என்னப்பா 'வேலைமானம்'?"

கைலா:—"பாரேன். முதலாவது இன்று இரவு ஒன்பது மணிக்குள் நாம் பாலாம்பாள் வீட்டுக்குப் போயிருப்போமா என்று சிதம்பரம் நம்முடைய ஜாகையில் விசாரிப்பார். இரண்டாவது தம் வீட்டுக்கு வரும்படி நாளைக் காலை உனக்கு கடிதம் அனுப்புவார்"

ராம:—"அதனால் ஒரு சந்தேகமா?"

கைலா:—"என்னவோ நீ செய்யும் வேலையொன்றும் அவருக்குப் பிடிக்கவில்லை. கூடியவரை ஜாக்கிரதையாயிருக்கப் பார்க்கிறார்."

ராம:—"என்ன! அவர்தானே இந்த விஷயத்தில் வேண்டிய முயற்சி செய்யச் சொன்னார்—"

கைலா:—"அப்படியல்லவே. 'போனது போகட்டும்' என்று அவர் சொல்லவில்லையா?"

ராம:—(ஞாபகம் வந்தவனுய்) "ச்ஸ்—ஆமாம்—ஆனல் நாம் இப்படிச்செய்வதில் அவருக்கு என்ன பாதகம்?"

கைலா:—"அது அவ்வளவு சுலபமாய்ப் பதில்சொல்லக் கூடியதா? உன் தகப்பனருக்குப் பிராண சிநேகராய்ச் சிதம்பரம் காட்டிக்கொள்ளுவது முற்றிலும் வேஷம்—"

ராம:-"ஆனல், அந்தப் பத்திரிகைகளைப் படித்துப்பார்த்தால் என் தகப்பனருக்குச் சிநேகராகவே இருந்ததாகத்தானே வெளியாகிறது."

கைலா:—"பத்திரிகைப்படி அப்படித்தான். ஆனல்—"

ராமஸ்வாமி திடுக்கிட்டுக் கைலாசத்தைப் பார்த்தான். அவன் எவ்வளவோ புத்திசாலியாயினும் இந்த விஷயத்தில் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தான் நல்ல யோக்கியனுனபடியால் பிறரிடம் அயோக்கியதை கற்பிக்க அவனுக்கு மனந்துணியவில்லை. கைலாசம் சொல்வதெல்லாம் மனதில் பதியாமல், சிதம்பரத்தின் சார்பாகவே பேசிவந்தான்.

ராம:—"கைலாசம்! நீ அப்படிச்சொல்வது அழகல்ல. சிதம்பரம் நல்ல யோக்கியர். தகப்பனர்போல என்னைக் காப்பாற்றினவர். நான் இந்த நிலைமையில் இருப்பதே அவரால்தான்!"

கைலா:—"வாஸ்தவம்தான் — இதைப்பற்றி என் இப்பொழுது தாவா?—ரூபாய் 50 பந்தயம். இன்றிரவு அவர் நம்மை இந்த ஜாகையில் விசாரிப்பார். நாளைக் கடிதமும் அனுப்புவார்."

ராமஸ்வாமி, கைலாசம் இவ்வளவு உறுதியாகச் சொல்லியதைக் கேட்டு வியப்புடன் அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இந்த நிலைமையில், கீழே எழுதிக்கொண்டிருந்த குமாஸ்தா ஒருவன் வந்து, வக்கீல் சிதம்பரம் வண்டியை நிறுத்தித் தாங்கள் இருக்கிறீர்களாவென்று விசாரித்தார் என்ருன். ராமஸ்வாமி திடுக்கிட்டான்.

கைலா:—(கைகொட்டிச் சிரித்துவிட்டு) "ராமஸ்வாமி! பார்த்தாயா என் ஜோஸ்யத்தை!" (குமாஸ்தாவைப் பார்த்து) "அவரை வரச் சொல்?" என்ருன்.

குமாஸ்தா:—" 'இருக்கிறார்கள்' என்றேன். சரி 'அவர்களைச் சிரமப்படுத்தவேண்டாம்' என்று சொல்லிவிட்டு விரைவாய் வண்டியை ஓட்டிச் சென்றுவிட்டார்" என்றான்.

கைலா:—(குமாஸ்தாவை அனுப்பிவிட்டு) "ராமஸ்வாமி! பார்த்தாயா?"

ராம:—"வாஸ்தவம்தான். நீ சொன்னது சரியாய்விட்டதே! ஆனாலும், என்னை இவ்வளவுதூரம் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்த அவர்மேல் எனக்குச் சந்தேகமே ஏற்படவில்லை."

கைலா:—"சரி அது போகட்டும். இன்னொரு ஜோஸ்யம்: என்ன அது தெரியுமா! நாளைக்காலை சிதம்பரம் உனக்குக் கடிதம் அனுப்புவார் என்பது!"

ராமஸ்வாமி தலையசைத்தான். அவனுக்குப் பதில் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அவன் மனோபாவங்கள் எல்லாம் மாறிவிட்டன. "மனிதர்களில் சிதம்பரம் கூடியவரை உத்தமபுருஷர். யோக்கியர், சத்தியவந்தர், நாணயமுள்ளவர் என்று எண்ணியிருந்தேன். கைலாசம் சொல்லுகிறபடி இவ்வளவும் விபரீதமாய் முடிந்தால், உலகத்தில் யாரைத்தான் நம்புகிறது? என்னவோ பார்ப்போம்!" என்று இவ்வாறு சிந்திக்கத் தொடங்கினான். மறுநாள் காலை 8 மணிக்குக் கடிதமும் வந்துசேர்ந்தது. அதில்,

"அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

"நீ கொஞ்சநாள்தான் மதுரையிலிருக்கக் கூடியவனாதலால், நீ கண்ட இடங்களில் தங்குவதும் சாப்பிடுவதும் நன்றாயில்லை. அம்மாமியும் உன்னைப்பார்க்க விரும்புகிறாள். நீ நம்முடைய ஜாகைக்கு வந்துசேரவும். தவறவேண்டாம். "பிற நேரில்"

என்று எழுதப்பட்டிருந்தது.

இதைப் படித்த ராமஸ்வாமி தனக்குள் ஆச்சரியம் அடங்காமல் கடிதத்தைக் கைலாஸம் கையில் எறிந்தான்.

கைலா:—(கடிதத்தைப் பார்த்துவிட்டு) "பார்த்தாயா? என்ன நினைக்கிறாய்? இந்தக் கிழவனார் இரண்டு வழிகளையுமல்லவோ பார்க்கிறார்? உனக்கும் நல்லவராய்க் காட்டிக்கொள்ளவேண்டும்—

தனக்கும் பாதகமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.—பேஷ்! பேஷ்!!"

ராம:—"இந்த விஷயத்தில் அவர் கெடுதி செய்வாரென்று நினைக்கிறாய்?"

கைலா:—(சற்று யோசித்து) "என்வாயால் அதை ஏன் சொல்ல வேண்டும்? நடக்க நடக்கத் தெரிகிறது. நேற்று அவருடைய நடத்தை அவ்வளவு திருப்திகரமில்லை. நீ பாலாம்பாளைப் பார்ப்பதும் அவருக்குச் சம்மதமில்லை. இதெல்லாம் யோசித்தால், இதைப்பற்றி மறுபடி உனக்குப் போதிக்க எண்ணித்தான் தன் வீட்டுக்கு உன்னையழைக்கிறார் என்று தோன்றுகிறது."

ராம:—"ஆனால் தஸ்தவேஜுகளை வலுவில் அவர்தாமே கொடுத்தார்?"

கைலா:—"ஆமாம் அவர் சொல்லாமற் போனால் பாலாம்பாள் சொல்லிவிடுகிறாள். அதனாலேதான், தாம் முன்னதாகவே நல்லவராய் காட்டிக்கொண்டார்."

ராம:—"என்ன ஆச்சரியம்! நீ சொல்வதைப் பார்த்தால் உலகத்தில் ஒருவரையும் நம்பலாகாது போலிருக்கிறதே!"

கைலா:—"அநேகமா யப்படித்தான். உலகத்தை ஆராய்ந்து பார்த்தாலல்லவோ தெரியும் மனிதர் யோக்கியதை. பசு வேஷம் பூண்ட புலிகள் அவர்கள்—மிருகங்களிலும் கேவலம் மனிதர். மிருகங்களைப் பார்த்த மாத்திரத்திலாவது இவை துஷ்டப் பிராணிகளென்று நாம் தப்பித்துக்கொள்ளலாம். மனிதனோ, அவன் மனம் துஷ்டமிருகங்கள்போல் கொடியதாயினும், அதை மறைத்து, நமக்கு அநுகூலமா யிருப்பவன்போல் பழகி, நம்மை வஞ்சித்துக்கெடுத்துவிடுவான். சரி. இருக்கட்டும். இந்தச் சிதம்பரம் நம்மை ஏமாற்ற முயன்றதால், நாம் அவரை ஏமாற்றிவிட வேண்டும். பார்வைக்குச் சிநேகம்போல் நீயும் அவரிடம் பழக வேண்டும்.

ஒன்பதாவது அத்தியாயம்.

தாயார்.

The Mother.

மனோபாவங்களில் புருஷர்களுக்கும் பெண்களுக்குமுள்ள வித்தியாசத்தைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், புருஷர்கள் தங்கள் மனதில் உதயமாகும் எண்ணங்களையும் அதன் பாதக சாதகங்களை யும் ஆலோசித்தறிந்த பின்னரேதான், அதன்படி நடக்க முயல் வார்கள். ஸ்திரீகளோ, மனம் வர்க்கு காயம் என்னும் திரிகரணங் களிலுமே அபலைகளாக யிருக்கின்றார்கள். அவர்கள் மனதில் ஏதாவது தோன்றிவிட்டால் அதை நிதானமாக பரிசோதித்தறிய வேண்டிய பொறுமை அவர்களுக்கிராது. மின்சாரப் பிரயோகம் செய்த பாவைபோல் திடீரென்று மனந்தோன்றியபடி நடந்து விடுவார்கள்.

பாலாம்பாள் **"விதியின் பயன்"** என்ற 'நாவ'லை வாசித்த பின்னரே, இருபது வருஷங்களுக்கு முன் அவளறிந்திருந்த "மங் களபுரம் கோலை"க் காட்சிகளெல்லாம் திடீரென்று அவள் மன திற்குத் தோன்றிவிட்டன. அத்தோற்றத்தை அவள் சற்றேனும் ஆராய்ச்சி செய்யாது, ரோகத்தால் மனம் நொந்தவளாய், திடீ ரென்று ராமஸ்வாமிக்குக் கடிதமெழுதி விட்டாள். ராமஸ்வாமி அன்று 3-மணிக்கு வருவதாய் அனுப்பிய கடிதம் பார்த்த பிறகு தான், அவளுக்குச் சற்றுக் கவலை உண்டாயிற்று. முன் மாலை யில் சிதம்பரத்துடன் எவ்வளவு பரிகாசமாய் அவர் மனம் நோகும் படி பேசினும், அவள் உண்மையில் தன்மனதில், 'ஏனடா இந்த விபரீதத்தை நாமாக இழுத்துவிட்டுக் கொண்டோம்?' என ஏங்க லானாள். கடைசியாய் 'இனிமேல் நமக்கு என்ன ஆகவேண்டி யிருக்கின்றது? காடு 'வா வா' என்கிறது; வீடு 'போ போ' என் கிறது. வரவேண்டியதெல்லாம் வரட்டும்; ஆனால் **ராமஸ்வாமிக்கு** முழுமையும் சொல்லவேண்டாம். ஏதோ கொஞ்சம் சொல்லி, சொன்னேமென்று பேர்பண்ணி விடுவோம். நம்மால் ஏன் இந்த வீண் வம்பு?—ஆனால் ஒருவேடிக்கை பண்ணலாம்—" என்று இவ் வாறு, பலவாறாக இன்னசெய்வதென்று நிச்சயப்படாமல் தவித் துக்கொண்டிருக்கையில், மணி மூன்று அடித்தது. ராமஸ்வாமியும்

வந்து சேர்ந்தான். அவன் பாலாம்பாள் என்ன சொல்லப்போகிறாளோ என்று ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமா யிருந்தான்.

பாலா:—(மந்தகாஸத்துடன்) "என்கடிதத்தைப் பார்த்ததும், 'இவள் யாரடா முன்பின் தெரியாதவள்?' என்று நீ நினைத்திருப்பாய். உண்மைதானே?"

ராம:—"ஆமாம் வாஸ்தவந்தான். ஏனம்மா! உங்களுக்கு என் பெற்றோரைத் தெரியுமோ?"

பாலா:—(திடுக்கிட்டு) "ஆமாம் தெரியும்" என்று சொல்லிக் கொண்டு முகம் துடைப்பதுபோல் தன் முகத்திலேற்பட்ட பயக் குறிகளை தன் முன்தானையால் சற்று மறைத்தாள்.

ராம:—"அங்ஙனமாயின் அந்தக் கொலை நடந்தபொழுது நீங்களும் மங்களபுரத்தில்தான் இருந்திருக்கிறீர்கள்?"

பாலாம்பாள் பயத்தால் பேச நாஎழாது தலையசைத்தாள்.

ராம:—"அப்படியானால், அந்தக் கொலையின் விபரம் முழுமையும் தங்களுக்குத் தெரிந்திருக்கலாமே?"

பாலா:—"முழுமையும் தெரியாது. அந்தக் காலப் பத்திரிகைகளில் வெளியான விஷயங்கள் மாத்திரம் கொஞ்சந் தெரியும்,"

ராம:—"கொலை செய்தவன் யார் என்பது உங்கள் அபிப்பிராயம்?"

பாலா:—"அது ஸம்சயமாகவே இருக்கிறது. என் னுவது தப்பிதமாயிருந்தாலும் இருக்கலாம்—தர்மராஜன்பேரில் தான் சந்தேகம்."

ராம:—"அப்படித்தான் சிலர் அபிப்பிராயம்."

பாலா:-"கொலை நடந்ததும் அவன் ஓடிவிட்டான். அதனுலேதான் அவன்மேல் கொஞ்சம்—"

ராம:—"தர்மராஜன் எப்படிப்பட்டவன்?"

பாலா:—"கெட்டையாய், சிவப்பாய் அழகாயிருப்பான். சிநேகத்துக்கு அவன்தான் தக்கவன். ஆனல் கொஞ்சம் முன்கோபி."

ராம:—"அவனுக்கும் என் தாயாருக்கும் சிநேகமுண்டோ?"

பாலா:—"ஐயோ பாவம்! அந்த அம்மாளை அப்படிச் சொல்லலாகாது. அருந்ததி என்றால் அவளுக்கே தகும். அவன் வருவான்; போவான். அவ்வளவே. குற்றம் சொல்ல இடமே இல்லை."

ராம:-"அப்படியானால் என் தகப்பனருக்கு அவ்விருவர்மீதும் அவ்வளவு சந்தேகம் ஏற்படக் காரணம்?"

பாலா:—"நான் என்ன சொல்லுவேன்! எல்லாம் அந்த சந்தேகத்தால் வந்த வினைதானே! உன் தாயாரும் தர்மராஜுவும் அண்ணன் தங்கைமாதிரி பழகினவர்களே. வேறு தோஷம் சொல்ல இடமே இல்லை."

ராம:—"தர்மராஜு அடிக்கடி வருவானோ?"

பாலா:—"உன்னைப் பெற்ற தாயைப் பற்றி நீயே இவ்வளவு சொல்ல உன்மனம் துணிந்ததா ? என்ன அநியாயம்!"

ராம:—"நானென்ன செய்வேன்? வேண்டுமென்று சொல்லுகிறேன்? உண்மையில் இந்தக் கொலைக்கு அவள்தானே காரணமென்று வெளியாகிறது."

பாலா:—"அவளை அப்படிச் சொல்லாதே. பாவம்! உன் தகப்பனர் அவளைப் படுத்தியபாடு, அப்பா! சொல்ல முடியாது. வாழ்வா! வரிசையா? என்ன உண்டு? ஏதோ உன் தகப்பனரிடத்தில் இருந்து வாழ அவளுக்கு விதியிருந்தது. உன்னைப் பெற்றாள். நீயே அவளை இப்படிச் சொல்வதென்றால் உலகத்தார் சொல்லக் கேட்பானேன்?"

ராம:—"பின்னை அவள்மேல் அபவாதம் வருவானேன்?"

பாலா:—"அதற்கு அவளா உத்தரவாதி? கொலை நடந்ததோ வாஸ்தவம். ஊர் அபவாதமோ அவள் பேரில். அவள் தலைவிதி. பேர் ஏற்பட்டு விட்டது. போலிஸ் புலிகளோ சொல்லவேண்டியதில்லை. யார்மேலாவது சாட்டவேண்டியதுதானே குற்றத்தை. தர்மராஜுவையோ அவர்களால் பிடிக்க முடியவில்லை. கழுவுக்கேற்ற கோமுட்டியாக அகப்பட்டாள் உன் தாயார். இதெல்லாம் சிதம்பரம் காட்டிய கட்டுகள் மூலம் நீ அறிந்திருக்கலாமே?"

ராம:—"சிதம்பரம் கட்டுகளைக் காட்டினது தங்களுக்கு எப்படித் தெரியும்?

பாலா:—(யோசித்துவிட்டு) "என்னிடம் அவர் சொன்னார்."

ராம:—"அவரை உங்களுக்குத் தெரியுமோ!"

பாலா:—"ஆமாம். ரொம்ப யோக்கியர். நல்லவர். தாய் தந்தைய ரற்றவனென்று நினைத்துக்கொண்டிருக்கிற உன்னை இவ்வளவு தூரம் வளர்த்து வந்தது அவரேயன்றோ?"

ராம:—"நான் தாய் தந்தையற்றவன் தானே? அதற்குச் சந்தேகமோ?"

பாலா:—"இல்லை. இல்லை. நீ எண்ணியிருப்பது தவறு."

ராம:—"நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே. என் தகப்பனரோ——"

பாலா:—"இறந்துவிட்டார்.—கொலையுண்டார்."

ராம:—"என் தாயார்——"

பாலா:—(பெருமூச்சுவிட்டு) "உயிருடன் இருக்கிறாள்!"

ராம:—"என் தாயார் இன்னும் உயிருடனிருக்கிறாளா! என்ன பயித்தியமா? அவள் தான் மதுரையில் கொஞ்ச நாளைக்கெல்லாம் இறந்து போனாளே."

பாலா:—"அப்படித்தான் உலகத்தோர் எண்ணி இருப்பது. இவ்வளவு அவமானம் நேர்ந்தபிறகு வெளியேயும் வருவாளோ ?"

ராம:—"பாலாம்பாளம்மாள் சொல்வது இதுகாறும் எவரு மறியா ஆச்சரிய விஷயமாயன்றோ இருக்கிறது?"

பாலா:—"நான் பாலாம்பாள் அல்ல. நான்தான் உன் தாயார்."

பத்தாவது அத்தியாயம்

ராமஸ்வாமியின் துக்கம்

Grief of Ramaswamy.

நடுக்காட்டிலுள்ள தனிமரம் ஒன்று பெருங்காற்றில் தாக்கப்பட்டு 'ஹோ!' என்று கதறிச் சாய்வதுபோல், 'ஐயோ! ஐயோ!' என்று கதறிக்கொண்டு தானிருந்த நாற்காலியில் சாய்ந்தான் ராமஸ்வாமி. பாலாம்பாளோ, தான் சாய்ந்திருந்த பெரிய திண்டில் தன் முகத்தைப் பதித்துக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

பாவம்! என்ன செய்வான்! தாயைப்பற்றிய லோகாபவாதமும், தன் பிதாவின் மரணத்துக்கு உண்மையான காரணம் அவள் தானென்ற தீர்மானமும், அப்படிப்பட்டவளை எதிரில் பார்க்க வேண்டியதாய் ஏற்பட்டதே என்ற எண்ணமும், ராமஸ்வாமியைத் துக்க சாகரத்தில் ஆழ்த்திவிட்டன. ஆயினும், கடலில் தத்தளிப்பவன் நாவில் ஒரு சொட்டுத்தேன் விழுந்ததுபோல், ராமஸ்வாமிக்குத் தன் தாயை எப்படியாவது பார்க்கும்படி நேரிட்டதல்லவா என்ற அற்பசொற்ப சந்தோஷம் இடைத்தோன்றி, அவமானமென்ற காரிருளில் மறைந்தது. இன்னது செய்கிறதென்றாவது இன்னது சொல்வதென்றாவது தோன்றாதவனாய் விம்மி விம்மி அழுதான்.

"ஆ! ஆ!! நம் தாய்தந்தையர் கைவிட்ட பருவத்தில், பெற்றோரைக் காட்டிலும் உற்றவராய் வளர்த்த சிதம்பரம், நமக்குக் கெடுதி நினைத்திருப்பாரா! இந்தக் கஷ்டமெல்லாம் ஏற்படுமென்றல்லவோ என்னைப்பார்க்க வேண்டாமென்று அவர் தடுத்தார். ஐயோ! 'மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்' என்பது எவ்வளவு உண்மை!" என்று பலவாறு துக்கித்தான். பாவம்! தர்மமே உருவெடுத்தாற் போல்விளங்கும் ராமஸ்வாமிமுன், அதர்மமே அவதரித்து வந்தவள் போல் பாலாம்பாள் விளங்கினாள்.

பாலா:—"அப்பா! குழந்தாய்! ஐயோ! நீகூட என்மேல் தோஷம் நினைக்கின்றாயா!"

ராம:—(கண்களை துடைத்துக்கொண்டு) "அம்மா! அம்மா! இல்லை. இல்லை. இந்தவிஷயத்தில் ஒருதரப்பை மாத்திரம் விசாரித்தால் உன்பேரில் சந்தேக மேற்பட்டது. உன்னையும் வேண்டுவன கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன்."

பாலா:—(கண்களைத் துடைத்துக்கொண்டு) "உனக்கு நான் என்ன அப்பா சொல்ல வேண்டும்!"

ராம:—"நீ உயிருடன் இருப்பதை நான்கூட அறியக் கூடாதென்று நீ மறைந்து காலங்கழிக்கக் காரணம் என்ன?"

பாலா:—"கண்ணே! பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையருமை. உன் தகப்பனார் கதியோ அவ்வாறு முடிந்தது. உன்னைப் பெற்ற இந்தப் பாவி தலையும் உலகத்தார் நகைக்கும்படி அவர்கள் வாயிலகப்பட்டு உருளலாயிற்று. நீயாவது உன் பெற்றோரை முற்றிலும் மறந்து, சௌக்கியமாய் வாழ்வாயே; நீ நன்றாயிருந்தால் கையாலே ஏதும் செய்யாவிடினும் கண்ணாலேயாவது பார்த்தும் காதாலே கேட்டும்கொண்டிருக்கலாமே என்றுதான். (விம்மி விம்மி மறுபடி அழுதுகொண்டு)—சிதம்பரமும் அவ்வாறே யுக்தி சொன்னார்."

ராமஸ்வாமி இவ்வார்த்தையைக் கேட்டவுடன், அனலிலிட்ட மெழுகுபோல் உருகினான். கடைசியாய்ச் சிதம்பரத்தைப்பற்றிய வார்த்தை வந்ததும் அவனுக்கு மறுபடி சந்தேகமுண்டாயிற்று. என்னசெய்வான்? தாயார்.—சொந்தத் தாயார்;—பெற்ற தாயாரை என்னசொல்வது? ஆயிரம் கெட்டவளாயினும் 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' என்றபடி, தெய்வத்துக் கொப்பானவளன்றோ தான் சம்பந்தப்பட்டமட்டிலாவது?

பாலா:—"நீ என்னவோ என்று பிரமிக்க வேண்டாமப்பா! நான் துர்அதிஷ்டக்காரியாய்ப் போனேனேயொழிய, என்மேல் யாதொரு தோஷத்துக்கு மிடமில்லை. என் சொந்தப் பணத்தைக் கொண்டுதான் இந்த வீடு வாசலெல்லாம் வாங்கிக்கொண்டேன்.—என் சொந்த ஜீவேஜை வைத்துத்தான் காலங்கழித்து வருகிறேன்."

ராம:—(பெருமூச்சு விட்டுக்கொண்டு) "சொந்த ஜீவேஜை எப்படி?"

பாலா:—"ஏதோ என்மானத்தையும் என்னையும் காப்பாற்றின அந்த மகானுபாவன் சிதம்பரம், அந்தக்காலத்திலேயே, என் நகை முதலானவைகளை விற்று, ஏதோ ஒரு 'இவேஜ்' செய்து இம்மட்டிலாவது வைத்தார். அவருமில்லாவிட்டால், நான் எங்கேயாவது துர்மரணமாய் இறந்திருக்கவேண்டியது தான்—"

ராம:—"அவர் ஏன் உன்னைப்பற்றிச் சொல்லவே இல்லை."

பாலா:—"எனக்கிஷ்டமில்லாமையே. முன்னமே சொன்னேனே காரணம்; நன்றாய் வாழ்வோர் நடுவில், நலம் குலைந்த நான், ஏன் வெளியே வரவேண்டுமென்று பெயரை மாற்றிக்கொண்டு உள்ளோடு உள்ளாய் ஒடுங்கினேன்."

ராம:—"அவ்வளவு இரகசியமாயிருந்தவள், இப்போது ஏன் சொல்ல விரும்பினாய்?"

பாலா:—"இதோ பார்த்தாயா இந்த நாவலை?"

ராம:—"இதை எழுதினவன் ஒருவேளை—என் தகப்பனார் கொலையைப்பற்றி அறிந்திருக்கலாம் என்கிறாயோ?"

பாலா:—"ஆமாம். ஆனால் அவன் கேள்வியை வைத்துத் தான் எழுதியிருக்கவேண்டும்"

ராம:—"எதனால் அப்படிச் சொல்லுகிறாய்?"

பாலா:—"காரணமா? அதில் சொல்லியிருக்கிற விவரமும் நடந்த விவரமும் அநேக இடங்களில் வித்தியாசப்படுகின்றன பார்—கொலைசெய்தவன் துரைசாமி என்று முடிக்கிறான்."

ராம:—"அதாவது, உண்மையில், வக்கீல் சிதம்பரம்."

பாலா:—(திடுக்கிட்டு) "அதெப்படி யறிந்தாய்?"

ராம:—"கண்ணால் வாசித்தேன். புத்தியால் யூகித்தேன்—ஆனால் கதை எழுதுபவன் அதை மொட்டையாய் விடலாகாதே? யாராவது ஒருவர் கொலை செய்ததாய் முடிக்கவேண்டுமல்லவா? துரைசாமி, அதாவது சிதம்பரம் செய்ததாய் முடித்தானென்று நினைக்கிறேன்"

பாலா:—"ஆனால் அவர்மேல் உனக்குச் சந்தேகமில்லையே?"

ராம:—'இல்லவே இல்லை. பூராக்கட்டையும் படித்துப் பார்த்தேன். அப்படி அவர் கொலைசெய்யக் காரணமொன்றும் தோன்றவில்லை"

பாலா:—"ஆனால் சம்பந்தம்' 'இறந்தவருடைய மனைவிமேலுள்ள காதலால் துரைசாமி கொலைசெய்த'தாகச் சொல்லுகிறான்."

ராம:—(மெதுவாய்) ''அதாவது—சிதம்பரம்—உன்மேல்—"

பாலா:—"அப்பா, நீயே இந்தமாதிரி உன் தாயாரைப் பார்த்துச் சொல்லுவதானால்—"

ராம.—"அல்ல. நீதான் 'அப்படி யொன்றுமில்லை' என்று விட்டாயே."

ராமஸ்வாமிக்கு முகம் வெளுத்தது. பாலாம்பாள்மேல் சந்தேகம் அதிகரித்தது. ஆனால் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. தன் தகப்பனார் மரணத்துக்கு அவளே காரணமென்று, தான் கொண்ட எண்ணத்தை மாற்றமுடியவில்லை. 20 வருஷமாய்த் தன்னைக் கைவிட்ட இவள், இப்பொழுது புத்திரவாஞ்சையால் என்னவோ பிதற்றுகிறாள் என்று எண்ணினான்.

இவ்வளவு காலத்துக்குப் பிறகா, அதிலும் இவ்வளவு அலங்கோலத்துக்குப் பின்பா, அவள்மேல் ராமஸ்வாமிக்கு அன்பும் மரியாதையும் ஏற்படப்போகின்றது? ஆகையால் அவன் "அம்மா! நீ தாயாரென்றே வைத்துக்கொள்கிறேன். இனிமேல் உனக்கும் எனக்கும் என்ன இருக்கிறது? என்னைப் பெற்ற கடன் ஒன்று தவிர, வளர்த்த தாயாராய் என்ன செய்தாய்? கடைசிவரை அவமானத்தைக் கொண்டுவந்து வைத்தாய்" என்றான்.

பாலா:—(கோபத்துடன்) "போதும், அப்பா! போதும். என் மட்டில் அடைத்துக் கிடவாமல் இதையேன் இழுத்துவிட்டுக் கொண்டேன்! (அழுதுகொண்டு) என்னவோ, 'நம் தாயாரே' என்று இரக்கப்படுவா யென நினைத்தேன். உன் தகப்பனாரைப் பார்க்கிலும் நீ பத்துமடங்காய் வந்து விட்டாயே."

ராம:—"என் தகப்பனாரைவிட—"

பாலா:—"ஆமாம். உன் தகப்பனாராலேதான் இவ்வளவும். —ஒருவாழ்வா வரிசையா? பொறியிருந்தது உன்னைப்பெற்றேன்

அந்த முண்டை, சீதையைக் கட்டியழுதுகொண்டு அவள் வார்த்தை யைக்கேட்டு, விடிந்து எழுந்தால் என்னை அடிப்பதும் திட்டு வதும்—" என்று சொல்லி விம்மிவிம்மி யழ ஆரம்பித்தாள்.

ராம:—"நீ சொல்வதற்குக் கொஞ்சமேனும் சாட்சியமில்லை"

பாலா:—"சாட்சியா? இந்தப்பாவி கண்ணாலே இராத்திரி நேரே பார்த்தேனே. என்வயிறு எரிகிறது. அந்த முண்டையையும் கண்டபடி திட்டினேன். இந்த லட்சணத்திலே கர்ப்பம் வேறே அவ ளுக்கு. அவ்வளவுதான்—மறுநாள் அவளும் ஓடிவிட்டாள். உன் தகப்பனாரையும் காணோம்.

ராம:—"அவர்தான் அன்றுமாலையிலே உன்னோடு கோபித் துக்கொண்டு போய்விட்டாரே?"

பாலா:—"போகவுமில்லை ஒன்றுமில்லை. விடியப் பத்து நாழிகை இருக்கும் நான் மதுரையிலிருந்து திரும்பிவரும்பொழுது. உள்ளே நுழைந்தேன். உன் தகப்பனாரும் சீதையும்—ஹ்ம்—இந்தப் பாவி பார்த்தேன். போனால் போகிறது என்றிருக்கலாகாதா? பெண்புத்தி பின்புத்திதானே? இவ்வளவும் நடக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறதே! என்னவோ வயிற்றெரிச்சலால் ஏதேதோ சொன்னேன். உன் தகப்பனாரைப் பார்த்தேன். அவர் தலைகுனிந்து கொண்டார். சீதை அவர் முன்பே நடந்ததை ஒப்புக்கொண்டாள். துக்கத்தோடு என் படுக்கையறை சென்று நான் படுத்தவள்தான் இன்னநடந்ததென்று தெரியாது. மூன்று நாள் பாயும் படுக்கையு மாய்க் கிடந்தேன். அவ்வளவுதான். மறுநாள் முதல் சீதையை யும் உன் தகப்பனாரையும் காணோம்."

ராம:—"வாஸ்தவந்தானா?"

பாலா:—"கட்டுப்பாடாகவா சொல்லுகிறேன்? உன் தகப் பனார் படுத்தினபாட்டுக்கெல்லாம் ஆளாயிருந்துஅவர் மனங்கோணா மல் நடந்துவந்தேன். அவரைக்கொன்ற பாதகன் யாரோ? அறி யேன். வெட்டின கத்தி நம் தோட்டத்திலேயே வேலியிலிருந்து போலீஸார் கையில் அகப்பட்டது. நான்கு நாளைக்கெல்லாம் உன் தகப்பனார் பிரேதமும் அகப்பட்டது. சீதை செய்த வேலையோ, அல்லது தர்மராஜா செய்த வேலையோ அந்த ஈசனுக்குத்தான் தெரியும்."

ராம:—"அல்லது சிதம்பரந்தான் செய்த வேலையோ?"

பாலா:—"அப்படி அபவாதம் சொல்லாதே. நீ அந்தப் புஸ்தகத்தைப் பார்த்தது முதல் உனக்கு மனம் பேதித்துவிட்டது. ஏதேதோ உளறுகிறாய். சிதம்பரம் நல்லவர். அவர் இல்லாவிட்டால் உன்கதியும் என் கதியும் அதோகதிதான்."

ராம:—"அது வாஸ்தவம் தான்—"

பாலா:—"என் புருஷனையிழந்து வருந்தும்பொழுது, நானே என் புருஷனைக் கொன்றதாக பாவிகள் என்மேல் கேஸ் கொண்டுவர, அந்த மகானுபாவன் கடைசிவரையிருந்து காப்பாற்றியிருக்கிறார். வீண் அபவாதம் சொல்லித் தோஷம் கட்டிக்கொள்ளாதே" என்று கோபத்தோடு படபடவென்று சொல்லிவிட்டு அயர்ந்து படுக்கையில் சாய்ந்தாள்.

ராமஸ்வாமி இவ்வளவு கடூரமாய்த் தான் நடந்துகொண்டதைப்பற்றி மனம் நொந்தவனாய்க் கொஞ்சம் தண்ணீரை அவள் முகத்தில் தெளித்து விசிறிக்கொண்டு "அம்மா! நான் தெரியாமல் வருத்தத்தால் சொல்லிவிட்டேன். நான் இப்பொழுதே உண்மை அறிந்துகொண்டேன். உன்மேலாவது, சிதம்பரத்தின் மேலாவது கொஞ்சமேனும் தோஷமில்லை. நீ மனம் நொந்து கொள்ளாதே" என்று சமாதானஞ் செய்தான்.

பாலா:—(கண்ணீர் தாரைதாரையாய் வடிய) "என்ன செய்வதாய் உன் எண்ணம்?"

ராம:—"என் தகப்பனாரைக் கொன்றவனை எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டும் என்பதே"

பாலா:—"வருஷம் இருபதாயிற்றே! இனி எவ்விதம் சாத்தியப்படும்?"

ராம:—"எப்படியாவது சம்பந்தம் என்பவனைக் கண்டுபிடித்து விசாரிக்க வேண்டும். ஒருவேளை தர்மராஜுதான் 'சம்பந்தம்' என்று பேர்வைத்துக்கொண்டு தன்பேரில் ஏற்பட்ட குற்றம் சிதம்பரத்தின்மேல் ஏற்படும்படி இந்த நாவல் எழுதியிருப்பனோ? எல்லாம் விசாரித்துத்தான் தெரியவேண்டும்."

R. S. நாராயணசாமி ஐயர், B. A. B. L.

புறங்கூறாமை.

"புறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்"—உலகநீதி.

'புறங்கூறாமை, என்பதற்குக் காணாதவழிப் பிறரை இகழ்ந்து உரையாமை' என்பது பொருள். ஒருவரைக் கண்டவிடத்துப் பழிச்சொற் கூறலினும், அவரைக் காணாவிடத்துக் கூறல் மிகவு மிழிந்த செய்கையாம். ஒருவரைக் கண்டவிடத்து அவரைப் பழிப்பது அத்துணைத் தவறாகாது.

ஒருவருடைய உள்ளக்கிடக்கையையும் நடத்தையையும் அளந்தறிவது மானிடரால் ஆகக்கூடிய காரியமன்று. நல்லோர்களும் தீயோர்களைப்போன்று சிற்சில வேளைகளில் காணப்படுகின்றனர். தீயோர்களும் நல்லோர்களைப்போலப் பற்பல சமயங்களில் தோன்றுகின்றனர். எனவே, உலகில் யாரும் எவர்மீதும் என்றும் புறங்கூறாதிருத்தல் நலம்.

பிறனொருவனது குற்றத்தை அவன் முற்புறத்திலே சொல்லுவோமாயின், நம் சுற்றத்தாரே, தம்மைப்பற்றியும் இவ்வாறே கூறக்கூடுமென்றஞ்சி நம்மைவிட்டு நீங்கினும் நீங்குவர். நம்மிடம் நட்புப் பாராட்டுவோரும் இலராவர். இல்லாப்பழிகளையும் நம்மீது நம் எதிரிலே சுமத்திக் கூறவும் செய்வர்.— தினமும் தர்மத்தைக்கொன்று மிகுந்த பாவங்களைச் செய்யினும் செய்யலாம். ஒருவன் எதிரே நின்று மாளும்படி உரைசெயினும் செய்யலாம். மறந்தாயினும் புறங்கூறல் கூடாது. இவ்வுண்மைகளைக்

"கேளிர் பிரிவர் ; நட்பினராய்க் கெழுமுவாரும் இலராவர் ;
மூளும் வடுச்சொல் எதிர்நின்று மொழிவர் எவரும்; ஆதலினால்
நாளும் அறத்தைக் கொன்றனந்த நவைகள் செயினும், எதிர்நின்று
மாள உரைசெ யினும்செய்யேல் மைந்தா! மறந்தும் புறங்கூறேல்"

என்ற விநாயக புராணச் செய்யுளாலும்,

"அறங் கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங் கூறான் என்றல் இனிது"

என்ற திருக்குறட் செய்யுளாலும் அறிக.

சிலர் 'மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற ஆன்றோர் மொழியை உட்கொண்டு, உயிரினும் மானத்தைப் பெரி

தாக மதிக்கின்றனர். அவ்விதம் எண்ணுவோருக்குப் புறங்கூறி, அவமானத்தை விளைவிப்பது எத்துணைக் கொடிய செய்கை. ஒருவரைக் கண்டவிடத்து அன்புடையார்போன்று ஒழுகிக் காணவிடத்து, புறங்கூறித் திரிதல் முறையோ? தகுமோ? தருமந்தானே? அந்தோ! இதனினும் புல்லிய தீயசெய்கை உலகில் வேறென்னுள்ளது? அறிவுடையார் இதனைப் பற்றுவரோ? எப் பாவத்தினும் பெருங் கொடும் பாவமன்றோ இது! ஏழாம் நரகத்திற்கும் கீழாம் நரகமன்றோ இதற்குக் கிடைக்கும்?

" குற்ற மிழைக்கும் குறைமதியான் முன், குறையைச்
சொற்று லவன்சினந்து தோமிழைப்பன்—கற்றறிந்தும்,
ஓர்குறைபு மில்லாதான் உண்டோ இங்(கு)? ஆதலினல்
ஆர்குறையுந் தூற்ற தமர் "

என்ற அறநெறியன்றோ ஆன்றோர் ஒழுகிய அரிய நெறி?

" நல்லன எண்ணியென்றும் நல்லன சொல்லிஎங்கும்
நல்லன செய்திடுவான் நல்லோனும்—அல்லல்வினை
தீயன வெண்ணியென்றும் தீயன சொல்லியெங்கும்
தீயனசெய் வோன்தீயோன் தேர் "

ஆதலின் வாயினின்று பிறக்கும் சொற்களைக்கொண்டே நல்லார் பொல்லார் என்பதைப் பெரும்பாலும் நிச்சயித்தறியலாம். நல்லோர், என்றும் நன்மையையே பேசுவர். ஒரு நாளும் பழிப்பான வார்த்தைகளைப் பகரமாட்டார்கள். ஜலதாரையினின்று துர்நாற்றம் வீசுவதையொப்பத் தீயோர்கள் தீமையான வார்த்தைகளையே பேசித் திரிவர். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தூண்டுதலினல் நல்லோரை நாடிச்சென்ற துரியோதனன் உலகில் நல்லோர் ஒருவரும் இல்லை என்று வந்து இயம்பிய தன்மையையும், தீயோரை நாடிச் சென்ற தருமபுத்திரன் யாவரும் நல்லோர்களே என்று வந்து நவின்ற நன்மையினையும் உற்று நோக்கி, இதன் உண்மையைத் தெளிக. யாவன் யாங்ஙனம் உளனே அங்ஙனமே அவனுக்கு உலகம் தோற்றுகின்றது.

" நன்மையதை நல்லோர் நயந்திடுவர், நன்மையிலாப்
புன்மையதைப் புல்லோரே போற்றிடுவர்—புன்மையினும்
புன்மைமிக்க தீய புறங்கூறற் பேணிடுவோன் [வெண்பா.
சன்மமதை என்னெனலாம்? சாற்று " என்பது அறநெறி

பலர் தங்கள் நன்மதிப்பைக்கொண்டே தங்கள் ஜீவியத்தை நடத்தக்கூடியவர்களாயிருக்கின்றனர். அங்ஙனம் உள்ளார்மீது பழிகூறி அவர்கள் கௌரவத்தைப் போக்கி அவர்களைப் பிழைப்பின்றித் திண்டாட விடுதலாகிய மாப்பெரும் பாவமும் இப் புன்செய்கையாலன்றோ நேரிடக் கூடியதாயிருக்கின்றது?

மற்றவனைக் குறித்துப் புறங்கூறுவோன் சொல்லும் பழிச்சொல்லானது, மாற்றானைக் காறியுமிழ்ந்த எச்சில், காற்றினால், உமிழ்ந்தவன் முகத்திலேயே வந்து படுவதைப்போல, அவனையே வந்தடைந்து கஷ்டத்திற்குள்ளாக்கு மென்பது திண்ணம்.

கோள் கேட்பவன் இல்லையாயின், கோட் சொல்லுபவனும் இல்லை. ஆதலின் கோட் சொல்லுவோனினும் கோள்கேட்பவன் பெருங் கொடும்பாவி என்றுணரல்வேண்டும். ‘சொல்லுவோர் சொன்னால் கேட்போருக்கு மதி எங்கே’! என்ற பழமொழியையும் கவனிக்க.

ஒருவனைப்பற்றி அவதூறு சொல்லக் கூடாதாயினும், நீதிமன்றத்தில் சாக்ஷி சொல்ல நேர்ந்தால், அந்த இடத்தில் மட்டும் அவனைப் பற்றி நாம் அறிந்த உண்மைகளைத் தெரிவித்தல் ஆவசிகம் அதுவுமன்றி அவனால் மற்றொருவன் கெட்டுப்போவதாகக் காணின், அக்காலத்தும் நாமறிந்த உண்மைகளை அவனுக்கு அறிவித்து அக்கெடுதியினின்றும் அவனைக் காக்கலாம். இவைகளன்றி மற்றெவ்விடத்தும் அன்னியர்மேல் தோஷாரோபணம் செய்யவொண்ணாது.

(இன்னும் வரும்.)

தமிழ்ப்பண்டிதர், சே. ரா. கணபதிசுப்ரமண்ய ஐயர்,
போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

விமலாதேவி.

“புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம், முற்காலத்தே தன தான்யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, கற்பிலும் வீரத்திலும் தியாகத்திலும் தேசாபிமானத்திலும் அரசியலுணர்ச்சியிலும் சிறந்த ஸ்திரீ ரத்நங்களுடையதாய், அருமையும் பெருமையுமிக்க செயல்களுக்கு நிலைக்களமாயிருந்தது” என்பதை இனிது விளக்குவது, இச் சரித்திர சம்பந்தமான தமிழ் நாவல். இது நாணக்கிய நாகலத்திலும் இனிமையிற் றழாதது.

விலை ரூ. 1—4—0.

ம. கோபாலகிருஷ்ணையர்,

2, ஆணிமுத்தம்மாள் ஸ்டோர்ஸ், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

ஸ்ரீ

பண்டைத் தமிழரசர் ஆட்சிமுறை.

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி செய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்" [சிலப். XXV 100-1804]

என்பன, தன் குடிமக்கள் நலன் பெரிதுஞ்சிறக்க உழைத்து அலுத்த ஒரு மன்னனது அனுபவமொழிகள். உண்மையிலே பண்டைத் தமிழரையர் யாவருமே

"மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின்" —[மணிமே. 7-7]

உணர்ந்து அதுவொப்ப வொழுகினர். "நம் வாழ்க்கை மிகவும் சிறப்புடைத்து; சிறந்த இன்பங்களைச் சேர வனுபவித்தல் இயலும்" என்றதொரு மகிழ்ச்சியை யடையவில்லை நம் தமிழரசர் தாம் அரசு கட்டிலேறிய காலத்து. ஆனால், தாம், குடிமக்கள் க்ஷேமம் அபிவிருத்தியைச் சாதித்தற்குப் பெருமுயற்சி செய்திடல்வேண்டும் எனவும், தொலைபா நல்லிசை நாவல் புலவர் நாவில் நிற்ப ஒழுகிடல் வேண்டும் எனவும், தருமதேவதையின் ஆணைகள் தவறாது நடக்க வேண்டும் எனவும், பெரிதும் அஞ்சினர். அரசவுரிமைபால் எய்தலாஞ் சிறப்பினும், அதனாலே தமக்கு ஏற்பட்டுள்ள கடமைகளையே பெரிதும் ஓர்ந்து, அவை நிறைவேறவேண்டுமே என நடுங்கினர்.

எஞ்ஞான்றும் தமளியிற் றுயிலுறும் போழ்தும், தமது குடிமக்களைப்பற்றிய சிந்தையே இவர்களுக்கு நிரம்பியிருந்தது. ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், செய்யவேண்டியனவற்றை ஆலோசித்துவைத்து, அரசனை எப்பொழுதுமே அலைத்து நிற்பர். சிறிது ஆலசியமாக இருப்பினும் அவைக்களப்புலவர் இவனுக்கு அறிவு கொளுத்துதல் மேற்கொண் டனுகி நிற்பர். பக்கத்திலே எப்பொழுதும்,

"படை வேண்டுழி வாளுதவியும்
வினை வேண்டுழி யறிவுதவியும்

வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்
தசைநுகம் படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசைச்——"—[புறம். 179]

செல்வர், மண்பெரிதும் படைத்த மேன்மையுறு மக்கள், பேரூர் கிழவர் உற்ற நன்மதி கூறவும், அரசர் சேனையை நடத்தி அமர் முகத்தே தம்போர்த் தொழிலருமை காட்டவும் வல்லராய் அமர்ந்திருப்பர். அரசனும் இவர் சூழவிருந்து ஆலோசனைசெய்து, தன்னரசு முறையிலே உரியன செய்வான். எனவே, குடிமக்களும் தம் உயிர் கொடுத்தும் அரசனுக் குற்றனபுரியச் சித்தமாக இருந்தனர்.

இவ்வரசர் தமது செங்கோல் வன்மையைப் பெரிதும் மதித்திருந்தனர். செங்கோல் திறத்தினாலே குடிகளுக்குச் செல்வத்தைப் பெருக்கியே அவரிடமிருந்து உரிய வரிகள் முதலிய கடமைகள் பெற்றுத் தமது நிதியை நிரப்புதல் சால்புடைத் தெனவும் கொடுங்கோன்மையால், குடிமக்கள் மிடியுற்றுத் தொலைய, தமது நிதியமும் வறள, நாடும் தன்னரசும் கெடநேரும் எனவும், இவர் உணர்ந்திருந்தனர். புலவரும் பிரபுக்களும் இதை எடுத்துக் கூறுவதுமுண்டு. இவர் இது உணர்ந்திருந்தமை **பாலைக்கலியுடையார்,**

"அலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சு வினைவாய்ந்ற் கோல்கோடி யவனிழல்
உலகுபோல் உலறிய வுயர்மர வெஞ்சுரம்"—[கலித். 10]

என வறண்ட பாலைச் சுரத்தினுக்குக் கொடுங்கோன் மன்னன் நாட்டினை யுவமையாக எடுத்தாண்டதினின்றுமே பெறப்படும். கொடுங்கோன் மன்னன் வாழுநாட்டினும், கடும்புலி வாழுங் காடு நன்றன்றோ?

அப்படி, மன்னவன் ஒருக்கால், செம்மையோராது, தன்னிச்சையில் நடக்கத் தலைப்பட்டானாயினும், தமிழ்மக்கள் "**சத்தியாக்கிரக முறைகளைக்** கைப்பற்றி அரசனை அடக்கவும் முயன்றனர். இதனைக் கலித்தொகையுடையாரே,

"ஒல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாதுகாத்தோம்பி
வெல்புக முலகேத்த விருந்துநாட் டுறைபவர்
ஊறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர்"-[கலித். 26]

எனக் குறிப்பிடுகிறார். தம் மன்னர் செம்மையிற் றிரிந்து தம்மைத் துன்புறுத்தினராக, குடிமக்கள் ஒருங்குகூடி வேற்றசர் நாட்டிலே

சென்று தங்கி, அவ்வரசன் குடிகளாக மாறுவர். அல்லது வேற்றரசர் உதவியை நாடிப் படைசேர்த்து தம் அரசனை வென்றிடவும் முயலுவர். அல்லது இவன் தேயம் நீத்து அருகிருக்குங் கானகம் நண்ணிக் காடுகெடுத்து நாடாக்கிப் புதுவதொரு ஜனநாயகவரசு நிலைநாட்டி ஆங்கு உறைந்திடவுஞ் செய்வர். இது செய்தியை மேற்காட்டிய கலித்தொகைப்பாவிற்கு உரைகூறுவான்புகுந்த 'உச்சி மேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்', "முன்னர் அந்நாடு ஆள்பவர் கலக்கமுறுத்த அலைபெற்று, பின் தன்னை நிழலாக அடைந்த குடிமக்களுக்கு நெஞ்சு வருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து, முன்பு நாடாட்சிபெற்ற பகைவரை வென்ற புகழை உலகத்தார் புகழப் புதுமையையுடைய நாட்டிலே இருக்கின்றவர்" எனவும், "முன்பு நாடாட்சிபெற்ற அரசர் செய்த வருத்தத்திற்கு அஞ்சி, நிழலாக வந்தடைந்தார்க்கு நெஞ்சு வருந்தாதபடி பகைவரைப் பேணிக்காத்து நெறியன்றி அவ்வரசர் பொருளை விரும்புகையினாலே அவரை நீங்கின நாட்டிலே இருக்கின்றவர்" எனவும் விளக்கிச்செல்கிறார். மிடியுற்றுத் தவிக்கும் குடிமக்களிடமிருந்து மேன் மேலும் கடமையிறுக்கும் (வரி வசூல் செய்யும்) கொடுமையினும் கொடுங்கோலுண்டோ?

"விளைவிற்குத்தக்க கடமையையே மன்னன் கொள்ளுதல் வேண்டும் என்ற விதியினை மீட்டும் மீட்டும் அறிஞர் எடுத்துக் கூறுவதை நாம் புறநானூற்றுப் பாக்களிற் காண்கிறோம். "ஒரு சிறு பகுதி நிலத்தின் விளைவு நெறியொடு கொண்டிடின் பலநாளைக்கு உண்டியாகும். ஆனால் மதித்துத் திரிதரும் யானைபுக்கின் பெருநில விளைவும் அதன் காற் கீழ்ப்பட்டு மடிந்திடும். அதுபோலப் பதனறிந்து இறைவன் இறைகொளல்வேண்டும்" என்பர் பிசிராந்தையார். பின்வருவது அவர் கூற்று:—

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்.
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்.
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிதும் நந்தும்.
மெல்லியன் கிழவ னாகி வைகலும்

வரிசை யறியாக் கல்லென் சுற்றமோடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே." —[புறம். 184]

நற்றிணை 226ல் இதனையே திறப்படக்கூறினார் கணிபூங்குன்றனாரும்

"மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யா ருயர்தவம். வளங் கெடப்
பொன்னுங் கொள்ளார் மன்னர்" என.

இவ்வாறு உற்ற கடமையே ஏற்றுக் கணக்காய் மாக்கள் வருத்த முறும்படி (குறு. 261. "காவலர் கணக்காய் வகையின் வருத்தி") பெருநிதி பெருக்கினர் தமிழ் மன்னர்.

அக்காலத்திலே நிலவரியே யன்றிப் பலவித வருவாய்களும் மன்னர்க்கிருந்தன என்பது ஒருவிதமாகத் துணியக்கூடியதே. பெரும்பாணாற்றுப் படையில் **81, 82** ஆவது வரிகளில்,

"கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழி—"

என்று வருதலில், சுங்கச் சாவடிகள் பெரும் பாட்டைகளிலே ஏற்படுத்தப்பட்டிருந்தன என நாம் அறிகிறோம். இதேமாதிரியாகவே துறைமுகத்திலும் நீர்வைச்சாலைகள் வளர்ந்து வந்தன.

"நல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழில் மாக்கள்
தேளரொடு பூண்ட மாஅ போல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி

மதி நிறைந்த மலிபண்டம்
பொதிமுடை——மன்றில்"

—பட்டினப்பாலையடிகள் (120—136)

என்பன இதனை விளக்குவ. இப்படியே விளக்குவர் பழமொழியுடையாரும்

—"ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்" —(பழ 1.) என.

இதுவேயன்றிச் சிற்றரசர் அளந்த திறையும், பகைவரை யட்டுக் கொணர்ந்த செல்வமும் அரசருக்கு உரியனவாம்.

"வேந்து தந்த பணிதிறை"—[புறம் 22.]

"எல்லையு மிரவு மெண்ணுப் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை—"—[புறம் 7.]

"நீயே யுமிசோம் புற்ற மன்னெயி
லோம்பாது கடந்தட் டவர்முடி புனைந்த
பசும்பொன்னி னடிபொலியக்
கழறைஇய வல்லாளனே"—[புறம் 40]

என்பன ஒருசில இதற்குச் சான்றுகள்.

ஆனல் பல துறையிலும் வந்த இவ்வருவாயைத் தமிழ் மன்னர் சும்மா சேமித்து வைத்திருக்கவில்லை. இவற்றை மீட்டும் மீட்டும் குடிமக்களுக்கு நல்லன புரிவதிலேயே செலவிட்டனர். தம் பரிசனங்களுக்குச் சம்பளங் கொடுப்பதிலும், ஊர்ப் பொதுக் காரியங்களுக்கும், தேவாலயங்கட்கு வழங்கவும், புலவரைச் சன்மானிக்கவுமே இவை உதவின. மேலும், இராச்சியத்திலே பலதிறப்பட்ட அரசகாரியங்களைச் செய்து நின்ற உத்தியோகத்தினர்க்கும் சேனைப்படைக்கும் எவ்வளவு பொருள் செலவாம் என்பதை யாரே வரையறுத்துக் கூறமுடியும்? இவற்றிற்கும் அவை யுதவின எனக் கொள்ளுதல் அமையுமன்றோ?

(இன்னும் வரும்)

R. வாசுதேவ சர்மா M. A.; B. L.
Lecturer in Sanskrit; National College,
Trichinopoly.

ஒரு ஐய வினா.

தசரதர்க்கு உத்தரக்கிரயைக் கடன் செய்தது யார்?
பரதனா? சத்துருக்கனனா?

ராமாயணக் கதையில், எனக்குத் தோன்றிய ஐயம் ஒன்றனை, 'உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியன்' மூலம் வெளியிடுகிறேன். ஆன்றோர், இதற்குரியசமாதானத்தை இந்நச்சினார்க்கினியன் மூலமே வெளியிடுமாறு வேண்டுகிறேன். என்னை?

ராமாவதாரத்திற்கு முதனூலாகிய வால்மீக ராமாயணத்திலே, தசரதர் இறந்ததும், அவர்க்குரிய உத்தரகிரியைகள் பரதனைக் கொண்டு செய்யப்பட்டன வென்று கூறியுளதாக வடமொழிவல்லார் கூறுகின்றனர். வழி நூலாகிய கம்பராமாயணத்திலே, வேறு வகையாற் கூறப்பட்டுளது. அது கீழ்வரும் செய்யுட்களால் விளங்கும்:—

1. இன்னே பலவும் பகர்வான் இரங்கா தானை நோக்கி,
சொன்னேன் இன்றே இவள்என் தாரம் அல்லள் துறந்தேன்
மன்னேயாவான் வருமப் பரதன் தனையும் மகனென்(று)
உன்னேன் முனிவ! அவனு மாகான் உரிமைக் கென்றான்.

—நகர்நீங்கு படலம்—50.

2 என்று கூறி நொந் திடரின் மூழ்குமத்,
துன்று தார வற் கிளைய தோன்றலால்,
அன்று நேர்கடன் அமைவ தாக்கினன்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான்.

—பள்ளியடைப்படலம்—137.

முதற் பாட்டில் தசரதர் கைகேயியையும் பரதனையும் தள்ளிவிட்டதாகவும், பிற்பாட்டில் வசிட்டர் சத்ருக்கனனைக் கொண்டு உத்தரக்கிரியை செய்வித்ததாகவும் கூறப்பட்டுள்ளமை காண்க.

N. T. திருவேங்கடாசாரி,
தேசிய கலாசாலை, திருச்சி